**செய்தி வெளியீடு எண்: 015** **நாள்: 08.01.2019**

**செய்தி வெளியீடு**

அண்ணா மேலாண்மை நிலையம் தமிழ்நாடு மாநில தகவல் ஆணைத்துடன் இணைந்து தகவல் அறியும் உரிமைச் சட்ட பிரிவின் கீழான பொதுத் தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீடு அலுவலர்களுக்கான ஒரு நாள் பயிற்சிப் பட்டறையினை இன்று (08.01.2019) நடத்தியது. அண்ணா மேலாண்மை நிலைய இயக்குநர் மற்றும் பயிற்சித் துறைத் தலைவர் திரு க.பணீந்தர ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்கள். தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்து தமிழ்நாடு அரசால் பிறப்பிக்கப்பட்ட அரசாணைகள், சுற்றறிக்கைகள் மற்றும் கடிதங்களின் தொகுப்புகள் கொண்ட புத்தகத்தின் முதல் பிரதியினை மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர் முனைவர் திருமதி M.ஷீலா பிரியா, இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் மாண்புமிகு நீதியரசர் திரு K.சந்துரு, (ஓய்வு) அவர்களுக்கு அளித்தார்கள். பயிற்சிப் பட்டறையில் மாண்புமிகு நீதியரசர் திரு K.சந்துரு (ஓய்வு) அவர்கள், தகவல் அறியும் உரிமைச் சட்டப் பிரிவு 4-இன் கீழ் தகவல்களை அணுக பொது அமைப்புகளது கடமைகள் மற்றும் பிரிவு 11-இன் கீழ் மூன்றாம் தரப்பினர் தொடர்பான தகவல்கள் மற்றும் அத்தகவல்கள் வழங்காமல் மறுக்கக்கூடிய இனங்கள் குறித்து எடுத்துரைத்தார்கள். தகவல் ஆணையர் திரு இரா.தட்சணாமூர்த்தி அவர்கள், தகவல் அறியும் உரிமைச் சட்ட பிரிவுகள் முறையே 5, 6 மற்றும் 7 ஆகியவைகளின் கீழ் பொதுத் தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீடு அலுவலர்கள் ஆகியோர்களது செயல்பாடுகள் மற்றும் பங்குகள் ஆகியவைகள் குறித்து எடுத்துரைத்தார்கள். மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர் அவர்கள் வாழ்த்துரையாற்றினார்கள். நிறைவாக அண்ணா மேலாண்மை நிலைய கூடுதல் இயக்குநர் திருமதி S.ஷோபா அவர்கள் நன்றியுரையாற்றினார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**